தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 பிப்ரவரி 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

சட்ட மன்ற மேலவை உறுப்பினர் திரு. தி. க. சண்முகம் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1968 ஆம் ஆண்டு முதல் தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையில் நியமன உறுப்பினராக இருந்து வந்த திரு. தி. க. சண்முகம் அவர்கள் 1973-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாளன்று இயற்கை எய்திவிட்டார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. க. சண்முகம் அவர்கள் தலைசிறந்த நாடகக் கலைஞர். "அவ்வை சண்முகம்" என்ற சிறப்புப் பெயர் பெற்று புகழ் ஈட்டியவர். இந்தியக் குடியரசின் "தாமரைத் திரு" பட்டம் பெற்றவர். 1966 ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழ் மாநாட்டில், இந்தியக் குழுவின் உறுப்பினராகக் கலந்துகொண்டவர். அவரது மறைவு தமிழ்நாட்டிற்கு ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்).

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியுட்ட வினாக்கள்.

Tirumalai Naicker Mahal

*161 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Tirumalai Naicker Mahal is to be converted into a Museum ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருமலை நாய்க்கர் மகாலை அரும்பொருட் காட்சியகமாக மாற்றும் கருத்து இப்பொழுது எதும் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : திருமலை நாயக்கர் மகாலைப் பாதுகாக்க அது வழி வகுக்கும் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதை ஒரு மியூசியமாக அரும் பொருட் காட்சியாக மாற்றும் குறிப்பு இல்லை. ஆனால், அதைக் கலைப் பொருள்கள் அடங்கிய ஒரு காட்சியகமாக வைக்கலாம் என்றும், அந்த அரண்மனையின் எழில் மறைந்துவிடாத வகையில் அதன் சுவர்ப் புறங்களில் மதுரையின் பண்டைய வரலாற்றிலிருந்து அண்மைக்கால வரலாறு வரையில் இலக்கியங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் உள்ள வரலாற்றுச் சிறப்புச் செய்திகள் அடங்கியிருக்கும் வகையில் அதனுடைய எழிலைப் பெருக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. பாண்டிய நாட்டு வரலாறு, மற்றவைகளையெல்லாம் ஓவியமாக சிறந்த ஓவியர்களைக் கொண்டு சுவர்களில் வரையலாம். பாண்டிய நாட்டுப் பகுதிகளில் இருக்கிற சிலைகள் மற்றவைகளையெல்லாம் கொண்டு வந்து வைத்து, பார்வையாளர்களுக்குக் கவர்ச்சிகரமாக அமையவேண்டும் என்ற முறையில், பொருள்களைக் கண்டு களிக்கும் வகையில் வைக்கலாம் என்ற ஒரு ஏற்பாடு இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : திருமலை நாயக்கர் மகாலில் முன்பு கோர்ட்டுகளெல்லாம் இருந்தன. இப்பொழுது அந்தக் கோர்ட்டுகள் போய் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. அதனால், இது பாதுகாக்கப்படாமல் இருக்கிறது. அதனைக் கலைப் பொருட் காட்சியகமாக அமைக்க வேண்டும் என்ற கருத்து இருந்தாலுங் கூட, எப்பொழுது அந்த வேலை துவங்கப்படும், அந்தக் கட்டடம் பழுதுபடாமலிருக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஒரு ஆண்டுக் காலமாக அது பழுது பார்க்கப்பட்டு வருகிறது. இடையிடையே எழுப்பப்பட்ட குறுக்குச் சுவர்களெல்லாம் அகற்றப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு, மறுபடியும் புதுப்பிக்கப்படுகிற பணிகளெல்லாம் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டதற்குப் பிறகு ஓவியங்கள் வரையவும் சிலைகளைக் கொண்டு வந்து வைக்கவுமான ஏற்பாடுகள் முறைப்படி நடக்கும்.

Coins of Chola Period.

*162 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minsiter for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Chola coins were recovered about the 16th instant at Tiruchirappalli ; and

(*b*) if so, the details thereof ?